©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 128-A] CHENNAI, THURSDAY, MAY 17, 2012
Vaikasi 4, Thiruvalluvar Aandu–2043

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

**பொதுத் துறை**

(மிக கமுக்கம்)

**1967ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்குத் தடை விதித்தல் பற்றிய அறிவிக்கை.**

*[அரசாணை (பல்வகை) எண் 442, பொது (மிக கமுக்க)த் துறை, நாள்: 16 மே 2012.]*

**No. II(1)/PUSC/14(c)/2012.**

புதுதில்லி, மத்திய உள் விவகார அமைச்சகத்தின் 14–5–2012 ஆம் நாளிட்ட எஸ். ஓ. 1062 (ஈ) ஆம் எண் அறிவிக்கை மீண்டும் வெளியிடப்படுகிறது:—

**எஸ்.ஓ.1062(ஈ).**—தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (இனி எல்.டி.டி.ஈ. என குறிப்பிடப்படுவர்) உண்மையில் இலங்கையைத் தளமாக கொண்ட ஒரு அமைப்பாகும். ஆனால், இந்த அமைப்பிற்கு இந்திய மண்ணில் அனுதாபிகளும், ஆதரவாளர்களும், முகவர்களும் இருப்பதாலும்;

மேலும், தமிழர்கள் அனைவருக்கும் என ஒரு தாய்நாட்டை (தமிழ் ஈழம்) உருவாக்குவதென்ற எல்.டி.டி.ஈ.–யின் நோக்கம், இந்திய நாட்டின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக அமைவதோடு, இந்திய நாட்டிலிருந்து அதன் ஒரு பகுதியை விட்டுக் கொடுப்பதற்கும், பிரித்துக் கொடுப்பதற்கும் ஒப்பானதாகும் என்பதாலும், எனவே, அது ஒரு சட்ட விரோத நடவடிக்கையின் வரம்பிற்குள் வருவதாலும்;

எல்.டி.டி.ஈ. யினர் இலங்கையில், 2009 மே திங்களில் இராணுவத் தாக்குதலில் தோல்வியடைந்த பின்னருங்கூட, தனி ஈழம் என்ற கொள்கையைக் கைவிடாமல், ஐரோப்பாவில் நிதி திரட்டியும், பிரச்சார நடவடிக்கைகள் வாயிலாகவும், தனி ஈழம் அமைப்பதற்காக, மறைமுகமாகச் செயல்பட்டு வருவதாலும், எல்.டி.டி.ஈ. தலைவர்கள் அல்லது போராளிகள், சிதறிக் கிடக்கிற தீவிரவாதிகளை ஒன்று சேர்ப்பதற்கும் தேவையான பொருட்களை வழங்குவோரை, உள்நாட்டிலும், பன்னாட்டு அளவிலும் மீண்டும் உயிர்ப்பிப்பதற்குமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாலும்;

பிரிவினைவாத தமிழ் பற்றார்வக்குழுவினரும் எல்.டி.டி.ஈ. ஆதரவாளர்களும் மக்களிடையே பிரிவினைவாதப் போக்கினைத் தொடர்ந்து வளர்த்து வருவதுடன், இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் எல்.டி.டி.ஈ–யினருக்கு ஆதரவான அடித்தளத்தை வலுப்படுத்தி வருவதாலும், அது, இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைச் சிதைக்கிற வலுவான அம்சமாக இருப்பதாலும், இயன்ற வகையிலான

அனைத்து சட்ட ரீதியான நடவடிக்கைகளின் வாயிலாக, இத்தகைய பிரிவினைவாத நடவடிக்கைகள் அனைத்தையும் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் தொடர்ந்து நிலவுவதாலும்;

**1908** ஆம் ஆண்டு வெடிமருந்துப் பொருட்கள் சட்டம், **1946** ஆம் ஆண்டு அயல்நாட்டினர் சட்டம் ஆகியவற்றின் விதித்துறைகள், இந்திய தண்டனை சட்டக் கோவை ஆகியவற்றின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன், **14–05–2010** ஆம் நாளிட்ட எஸ்.ஓ. **1090** (ஈ) ஆம் எண்ணுள்ள கடைசி அறிவிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து, அதாவது **2010** மே திங்களுக்கும், **2012** பிப்ரவரி திங்களுக்கும் இடைப்பட்ட கால அளவில் எல்.டி.டி.ஈ., எல்.டி.டி.ஈ. ஆதரவாளர்கள், குறுகிய நாட்டுப்பற்று கொண்டவர்கள் ஆகியோர் மீது, **1967**ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாலும்;

உலகம் முழுவதும் பரவியுள்ள எல்.டி.டி.ஈ. யினர், இணையதளத்தில் கட்டுரைகள் வெளியிடுவதன் வாயிலாக, எல்.டி.டி.ஈ. யின் தோல்விக்கு, இந்திய நாட்டின் உயர் அரசியல் தலைவர்களும், அதிகாரிகளும்தான் காரணம் எனக் கூறி, இலங்கைத் தமிழர்களிடையே இந்திய விரோதப்போக்கைத் தொடர்ந்து பரப்பி வருவதாலும், இணையதளம் மூலமாக தொடர்ந்து செய்யப்படும் இத்தகைய பிரச்சாரம், இந்தியாவின் உயர் பெருமக்களின் பாதுகாப்பை மிகவும் பாதிப்பதாலும்;

மேற்சொன்ன காரணங்களுக்காக, எல்.டி.டி.ஈ. அமைப்பு ஒரு சட்டவிரோத அமைப்பு என்றும், இத்தகைய பிரிவினைவாத நடவடிக்கைகள் அனைத்தையும் இயன்ற வகையிலெல்லாம் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயத் தேவை தொடர்ந்து உள்ளது என்றும் மத்திய அரசு கருதுவதாலும்; மேலும் இத்தகைய நிலையில் மத்திய அரசுக்கு கிடைத்த தகவலின்படி

(i) தமிழகத்தில், அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட எஞ்சியுள்ள எல்.டி.டி.ஈ. போராளிகள், அதை விட்டு விலகியவர்கள், அனுதாபிகள் ஆகியோரின் நடவடிக்கைகள் குறித்து விசாரித்ததில், தமிழ்நாட்டுக்கு அனுப்பப்பட்ட இந்த இயக்கத்தை சேர்ந்தவர்கள், எல்.டி.டி.ஈ. இயக்கத்தினரால் இறுதியில் சட்ட விரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவர் என்று தெரிய வருவதாலும்;

(ii) தடையாணை செயற்பாட்டில் உள்ள நிலையில், இந்தியாவில் எல்.டி.டி.ஈ ஆதரவு இயக்கங்கள் மற்றும் தனி மனிதர்களின் நடவடிக்கைகள் காணப்பட்டதாலும், இந்த சக்திகள் எல்.டி.டி.ஈ. இயக்கத்திற்கு தங்களது ஆதரவை விரிவுப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டதாலும்;

(iii) இவர்களின் இந்த அமைப்பு குறித்த இந்தியாவின் கொள்கை மற்றும் அவர்களுடைய செயல்களை ஒடுக்குவதில் மாநில நிர்வாகத்தின் நடவடிக்கை ஆகியவை குறித்து எல்.டி.டி.ஈ. தலைவர்கள், இயக்கத்தினர் மற்றும் ஆதரவாளர்கள், வெறுப்புற்றிருக்கிறார்கள் என்றும், மத்திய அரசுக்கு தகவல் கிடைத்துள்ளதாலும்;

எல்.டி.டி.ஈ. அமைப்பின் மேற்சொன்ன நடவடிக்கைகள் இந்திய இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், பொது அமைதிக்கும், தொடர்ந்து அச்சுறுத்தலாகவும் குந்தகம் விளைவிப்பதாகவும் கருதி, இவ்வமைப்பு ஒரு சட்ட விரோதமான அமைப்பு என அறிவிக்கப்பட வேண்டுமென்றும் மத்திய அரசு கருதுவதாலும்;

மேலும், (i) எல்.டி.டி.ஈ. அமைப்பின் தொடர் வன்முறை மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும் குந்தகம் விளைவிப்பதாக இருப்பதாலும், (ii) இவ்வமைப்பு இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதால், இந்திய மக்களின் பாதுகாப்பிற்கு தொடர்ந்து பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாலும், எல்.டி.டி.ஈ. அமைப்பை சட்ட விரோதமான அமைப்பாக உடனடியாக அறிவிப்பது அவசியம் என்று மத்திய அரசு மேலும் கருதுவதாலும்;

எனவே, தற்போது **1967** ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் **(37/1967)** **3** ஆம் பிரிவின் **(1)** உட்பிரிவிலும், **(3)** உட்பிரிவின் வரம்பு நிபந்தனைகளிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பை (எல்.டி.டி.ஈ.) சட்ட விரோத அமைப்பாக இதனால் அறிவித்து, மேற்சொன்ன சட்டத்தின் **4** ஆம் பிரிவின் கீழ், பிறப்பிக்கப்படக்கூடிய எந்த ஒரு ஆணைக்கும் உட்பட்டு, இந்த அறிவிக்கை **அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து உடனடியாக செயலுக்கு வரும் என்று கட்டளையிடுகிறது.

[I–11034/1/2012/IS–1]

தர்மேந்திர சர்மா,
*இணைச் செயலாளர்.*

**தேபேந்திரநாத் சாரங்கி,**
*அரசு தலைமைச் செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.